**இந்திய அரசு**

**சட்டம் மற்றும் நீதி அமைச்சகம்**

सत्यमेव जयते

# மின்னணு மென்சுருட்டுகளைத் (தயாரித்தல், உற்பத்தி, இறக்குமதி, ஏற்றுமதி, இடம்விட்டு எடுத்துச் செல்லுதல், விற்பனை, பகிர்ந்தளித்தல், சேமித்தல் மற்றும் விளம்பரம் செய்தல்) தடையுறுத்துதல் சட்டம், 2019

**(எண் 42/2019)**

**(2023, அக்டோபர் 31 அன்று இருந்தவாறு )**

# The Prohibition of Electronic Cigarettes (Production, Manufacture, Import, Export, Transport, Sale, Distribution, Storage and Advertisement) Act, 2019

**(No. 42 of 2019)**

**(As on 31st October, 2023)**

தமிழாக்கம்:

இந்திய அரசுக்காக

தமிழ்நாடு மாநிலச் சட்ட ஆட்சிமொழி ஆணையம்

சென்னை


தமிழ்நாடு அரசு எழுதுபொருள் மற்றும் அச்சுத்துறை ஆணையரால் அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது

2023

# மின்னணு மென்சுருட்டுகளைத் (தயாரித்தல், உற்பத்தி, இறக்குமதி, ஏற்றுமதி, இடம்விட்டு எடுத்துச் செல்லுதல், விற்பனை, பகிர்ந்தளித்தல், சேமித்தல் மற்றும் விளம்பரம் செய்தல்) தடையுறுத்துதல் சட்டம், 2019

(எண் 42/2019)

# The Prohibition of Electronic Cigarettes (Production, Manufacture, Import, Export, Transport, Sale, Distribution, Storage and Advertisement) Act, 2019

**(No. 42 of 2019)**

# PREFACE

This edition of the Prohibition of Electronic Cigarettes (Production, Manufacture, Import, Export, Transport, Sale, Distribution, Storage And Advertisement) Act, 2019 (No. 42 of 2019) 31st October 2023, containing the Authoritative Texts of that Act in Tamil and the same was published in the Gazette of the India, Extraordinary, Part XV, Section 1,Vol. I, dated 17th July,2023 on Pages from 298 to 310.

The Authoritative Texts in Tamil was published under the authority of the President under clause (a) of section 2 of the Authoritative Texts (Central Laws) Act, 1973 (50 of 1973) and on such publication, it become the authoritative texts of the Act in Tamil.

New Delhi, *(Signed)……*
17th July, 2023. *Secretary to Government of India.*

# முன்னுரை

2023, அக்டோபர் 31 அன்று இருந்தவாறுள்ள மின்னணு மென்சுருட்டுகளைத் (தயாரித்தல், உற்பத்தி, இறக்குமதி, ஏற்றுமதி, இடம் விட்டு எடுத்துச் செல்லுதல், விற்பனை, பகிர்ந்தளித்தல், சேமித்தல் மற்றும் ளம்பரம் செய்தல்) தடையுறுத்துதல் சட்டம், 2019 (எண் 42/2019) இன் இந்தப் பதிப்பு அச்சட்டத்தின் அதிகாரவுரிமைப்படியான தமிழ் வாசகத்தைக் கொண்டுள்ளது, இது 2023, ஜூலை 17 ஆம் தேதியிட்ட இந்திய அரசிதழின் சிறப்பிதழ், பகுதி XV, பிரிவு 1, தொகுதி I இன் 298 முதல் 310 வரையிலான பக்கங்களில் வெளியிடப்பட்டது.

இந்த அதிகாரவுரிமைப்படியான வாசகமாகிய தமிழ் மொழிபெயர்ப்பு , அதிகாரவுரிமைப்படியான வாசகங்கள் (மையச் சட்டங்கள்) சட்டம், 1973 இன் (50/1973) பிரிவு 2 இன் கூறு (அ) வின்படி குடியரசுத்தலைவருக்குள்ள அதிகாரத்தின்படி வெளியிடப்பட்டது, அவ்வாறு வெளியிடப்பட்டதன் பேரில், இது தமிழில் அச்சட்டத்தின் அதிகாரவுரிமைப்படியான வாசகம் ஆயிற்று.

புதுதில்லி, (ஒப்பம்)……
17, ஜூலை 2023. இந்திய அரசு செயலாளர்.

# THE PROHIBITION OF ELECTRONIC CIGARETTES (PRODUCTION, MANUFACTURE, IMPORT, EXPORT, TRANSPORT, SALE, DISTRIBUTION, STORAGE AND ADVERTISEMENT) ACT, 2019

**(No. 42/2019)**

## ARRNGEMENT OF SECTIONS

**SECTIONS** **Page No.**


| | | |
|---|---|---|
| 1. | Short title and commencement. | 1 |
| 2. | Declaration as to expediency of control by Union. | 1 |
| 3. | Definitions. | 1 |
| 4. | Prohibition on production, manufacturing, import, export, transport, sale, distribution, advertisement of electronic cigarettes. | 4 |
| 5. | Prohibition on storage of electronic cigarettes. | 4 |
| 6. | Power to enter, search and seize without warrant. | 5 |
| 7. | Punishment for contravention of section 4. | 6 |
| 8. | Punishment for contravention of section 5. | 6 |
| 9. | Jurisdiction and trial of offences. | 6 |
| 10. | Power to dispose of stock seized. | 6 |
| 11. | Offences by companies. | 6 |
| 12. | Cognizance of offences. | 7 |
| 13. | Offences to be cognizable. | 7 |
| 14. | Act to have overriding effect. | 7 |

# மின்னணு மென்சுருட்டுகளைத் (தயாரித்தல், உற்பத்தி, இறக்குமதி, ஏற்றுமதி, இடம் விட்டு எடுத்துச் செல்லுதல், விற்பனை, பகிர்ந்தளித்தல், சேமித்தல் மற்றும் விளம்பரம் செய்தல்) தடையுறுத்துதல் சட்டம், 2019

**(எண் 42/2019)**

## பொருளடக்கம்


| பிரிவுகள் | | பக்கம் |
|---|---|---|
| 1. | குறுந்தலைப்பு மற்றும் தொடக்கம் , | 1 |
| 2. | ஒன்றியத்தால் கட்டாள்கை செய்யப்படுவதானது உகந்தது என விளம்புகை. | 1 |
| 3. | பொருள் வரையறைகள். | 1 |
| 4. | மின்னணு மென்சுருட்டுகளைத் தயாரித்தல், உற்பத்தி, இறக்குமதி, ஏற்றுமதி, இடம்விட் எடுத்து செல்லுதல், விற்பனை, பகிர்ந்தளித்தல், சேமித்தல் மற்றும் விளம்பரம் செய்தல் மீதான தடையுறுத்தும். | 4 |
| 5. | மின்னணு மென்சுருட்டுகளை சேமித்தல் மீதான தடையுறுத்தம். | 4 |
| 6. | ஆணையின்றி நுழைவதற்கும், சோதனையிடுவதற்கும் மற்றும் கைப்பற்றுகை செய்வதற்குமான அதிகாரம். | 5 |
| 7. | 4 ஆம் பிரிவை மீறுவதற்கானத் தண்டனை. | 6 |
| 8. | 5 ஆம் பிரிவை மீறுவதற்கானத் தண்டனை. | 6 |
| 9. | குற்றச்செயல்களின் அதிகாரவரம்பும் விசாரணையும். | 6 |
| 10. | கைப்பற்றப்பட்ட சரக்கு இருப்புகளைத் தீர்வு செய்தலுக்கான அதிகாரம். | 6 |
| 11. | நிறுமங்களால் செய்யப்படும் குற்றச்செயல்கள். | 6 |
| 12. | குற்றச்செயல்களை விசாரணைக்கு எடுத்துக்கொள்ளுதல். | 7 |
| 13. | குற்றச்செயல்கள் பிடியாணையின்றிக் கைது செய்யத்தக்கவையாக இருத்தல். | 7 |
| 14. | சட்டம் மீதூர்ந்து இயங்கும் செல்திறமுடையது. | 7 |

15. Application of other laws not barred. 8

16. Protection of action taken in good faith. 8

17. Power to remove difficulties. 8

18. Repeal and savings. 8

| | | |
|---|---|---|
| 15. | பிற சட்டங்கள் பொருந்துவது தடை செய்யப்படவில்லை. | 8 |
| 16. | நல்லெண்ணத்தில் எடுக்கப்பட்ட நடவடிக்கைக்குப் பாதுகாப்பு. | 8 |
| 17. | இடர்ப்பாடுகளை அகற்றுவதற்கான அதிகாரம். | 8 |
| 18. | நீக்கறவும் காப்புரைகளும். | 8 |

# THE PROHIBITION OF ELECTRONIC CIGARETTES (PRODUCTION, MANUFACTURE, IMPORT, EXPORT, TRANSPORT, SALE, DISTRIBUTION, STORAGE AND ADVERTISEMENT) ACT, 2019

**(No. 42 of 2019)**

[05th December, 2019.]

An Act to prohibit the production, manufacture, import, export, transport, sale, distribution, storage and advertisement of electronic cigarettes in the interest of public health to protect the people from harm and for matters connected therewith or incidental thereto.

BE it enacted by Parliament in the Seventieth Year of the Republic of India as follows:—

Short title and commencement.

1. (1) This Act may be called the Prohibition of Electronic Cigarettes (Production, Manufacture, Import, Export, Transport, Sale, Distribution, Storage and Advertisement) Act, 2019.

(2) It shall be deemed to have come into force on the 18th day of September, 2019.

Declaration as to expediency of control by Union.

2. It is hereby declared that it is expedient in the public interest that the Union should take under its control the electronic cigarettes industry.

Definitions.

3. In this Act, unless the context otherwise requires,—

(a) "advertisement" means any audio or visual publicity, representation or pronouncement made by means of any light, sound, smoke, gas, print, electronic media, internet or website or social media and includes through any notice, circular, label, wrapper, invoice or other document or device;

(b) "authorised officer" means—

(i) any police officer not below the rank of sub-inspector; or

(ii) any other officer, not below the rank of sub-inspector, authorised by the Central Government or the State Government by notification;

# மின்னணு மென்சுருட்டுகளைத் (தயாரித்தல், உற்பத்தி, இறக்குமதி, ஏற்றுமதி, இடம்விட்டு எடுத்துச் செல்லுதல், விற்பனை, பகிர்ந்தளித்தல், சேமித்தல் மற்றும் விளம்பரம் செய்தல்) தடையுறுத்துதல் சட்டம், 2019

**(எண் 42/2019)**

[2019, டிசம்பர் 05]

பொது மக்களின் நல்வாழ்வு கருதி அவர்களுக்கு தீங்கு விளையாமல் பாதுகாக்கும் பொருட்டு மின்னணு மென்சுருட்டுகளைத் தயாரித்தல், உற்பத்தி, இறக்குமதி, ஏற்றுமதி, இடம்விட்டு எடுத்துச் செல்லுதல், விற்பனை, பகிர்ந்தளித்தல், சேமித்தல் மற்றும் விளம்பரம் செய்தலைத் தடையுறுத்துவதற்கும் மற்றும் அதனுடன் தொடர்புடைய அல்லது அதற்குச் சார்வுறுவான பொருட்பாடுகளுக்குமான ஒரு சட்டம்.

இந்தியக் குடியரசின் எழுபதாம் ஆண்டில் நாடாளுமன்றத்தால் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக:—

குறுந்தலைப்பு மற்றும் தொடக்கம்.

**1. (1)** இந்தச் சட்டம், மின்னணு மென்சுருட்டுகளைத் (தயாரித்தல், உற்பத்தி, இறக்குமதி, ஏற்றுமதி, இடம்விட்டு எடுத்துச் செல்லுதல், விற்பனை, பகிர்ந்தளித்தல், சேமித்தல் மற்றும் விளம்பரம் செய்தல்) தடையுறுத்துதல் சட்டம், 2019 என்று வழங்கப்பெறும்.

(2) இது, 2019, செப்டம்பர் 18 ஆம் நாளன்று செல்லாற்றல் பெற்றிருப்பதாகக் கொள்ளப்படுதல் வேண்டும்.

ஒன்றியத்தால் கட்டாள்கை செய்யப்படுவதானது உகந்தது என விளம்புதல்.

**2.** ஒன்றியம், பொது நலன் கருதி, மின்னணு மென்சுருட்டுகள் விசைத் தொழிலை அதன் கட்டாள்கையின் கீழ் எடுத்துக்கொள்ள வேண்டும் என்பது உகந்ததாக இருக்கிறது என்று ஈங்கிதனால் விளம்புகை செய்யப்படுகிறது.

பொருள் வரையறைகள்.

**3.** இந்தச் சட்டத்தில், தறுவாயின் தேவை வேறானாலன்றி,—

(அ) ‘‘விளம்பரம்’’ என்பது, ஒளி, ஒலி, புகைப்படலம், வளிமம், அச்சு, மின்னணு ஊடகம், இணையம் அல்லது வலைதளம் அல்லது சமூக ஊடகம் வழியாகச் செய்யப்படும் ஒலியுணர் அல்லது கண்டுணர் விளம்பரம், சித்தரிப்பு அல்லது கருத்துரைப்பு எதுவும் என்று பொருள்படும்; மற்றும் அறிவிப்பு, சுற்றறிக்கை, குறிப்புச்சீட்டு, பொதியுறை, விலைப்பட்டி அல்லது பிற ஆவணம் அல்லது சாதனம் எதனின் மூலமாகவுமானவற்றையும் உள்ளடக்கும்;

(ஆ) ‘‘அதிகாரமளிக்கப்பெற்ற அலுவலர்’’ என்பது—

(i) சார்—ஆய்வாளர் படிநிலைக்குக் கீழமையாத காவல் அலுவலர் எவரும்; அல்லது

(ii) மைய அரசால் அல்லது மாநில அரசால் அறிவிக்கை வாயிலாக அதிகாரமளிக்கப்பெறும் சார்—ஆய்வாளர் படிநிலைக்குக் கீழமையாத பிற அலுவலர் எவரும்

என்று பொருள்படும்;

(c) "distribution" includes distribution by way of samples, whether free or otherwise and the expression "distribute" shall be construed accordingly;

(d) "electronic cigarette" means an electronic device that heats a substance, with or without nicotine and flavours, to create an aerosol for inhalation and includes all forms of Electronic Nicotine Delivery Systems, Heat Not Burn Products, e-Hookah and the like devices, by whatever name called and whatever shape, size or form it may have, but does not include any product licensed under the Drugs and Cosmetics Act, 1940. 23/1940.

**Explanation.**—For the purposes of this clause, the expression "substance" includes any natural or artificial substance or other matter, whether it is in a solid state or in liquid form or in the form of gas or vapour;

(e) "export" with its grammatical variations and cognate expressions, means taking out of India to a place outside India;

(f) "import" with its grammatical variations and cognate expressions, means bringing into India from a place outside India;

(g) "manufacture" means a process for making or assembling electronic cigarettes and any part thereof, which includes any sub-process, incidental or ancillary to the manufacture of electronic cigarettes and any part thereof;

(இ) ''பகிர்ந்தளித்தல்'' என்பது, இலவசமாகவோ பிறவாறாகவோ, மாதிரிகள் என்ற வகையில் பகிர்ந்தளித்தலை உள்ளடக்கும்; மற்றும் ''பகிர்ந்தளி'' என்ற சொல் அதன்படியே பொருள் கொள்ளப்படுதல் வேண்டும்;

(ஈ) ''மின்னணு மென்சுருட்டு'' என்பது, புகையை நுரையீரல்களுக்குள் பரவுமாறு உள்ளிழுப்பதற்காக ஓர் புகைப்படலத்தை ஏற்படுத்துவதற்குப் புகையிலை நச்சு (நிக்கோடின்) வழங்கு கருவித் தொகுதி மற்றும் நறுஞ்சுவையூட்டுப் பொருள்கள் ஆகியவற்றுடனோ இல்லாமலோ ஒரு பொருளை சூடேற்றும் ஒரு மின்னணு சாதனம் என்று பொருள்படும்; மற்றும் மின்னணு புகையிலை நச்சு (நிக்கோடின்) வழங்கு கருவித் தொகுதி, எரிந்து போகாத சூடேற்றுப் பொருள்கள், மின்–ஹுக்கா மற்றும் எந்தப் பெயராலும் வழங்கப்பெறும் மற்றும் எந்த உருவம், அளவு அல்லது வடிவத்தையும் கொண்டதான அதே போன்ற சாதனங்களின் அனைத்து வடிவங்களையும் உள்ளடக்கும்; ஆனால் மருந்துச் சரக்குகள் மற்றும் நறுமணப்

23/1940. பொருள்கள் சட்டம், **1940** இன்படி உரிமம் வழங்கப்பட்ட பொருள் எதனையும் உள்ளடக்காது.

**விளக்கம்.–** இந்தக் கூறின் நோக்கங்களுக்காக, ''பொருள்'' என்ற சொல், ஒரு திட நிலையிலோ அல்லது ஒரு நீர்ம வடிவத்திலோ அல்லது வளிமம் அல்லது ஆவி வடிவத்திலோ இருக்கும், இயற்கையான அல்லது செயற்கையான பொருள் அல்லது பிற பொருள் எதனையும் உள்ளடக்கும்;

(உ) ''ஏற்றுமதி'' என்பது, அதன் இலக்கண வேறுபாடுகளுடனும் அதன் பொருள் சேர்ந்த சொற்றொடர்களுடனும், இந்தியாவிலிருந்து இந்தியாவிற்கு வெளியேயுள்ள ஓர் இடத்திற்கு எடுத்துச் செல்லுதல் என்று பொருள்படும்;

(ஊ) ''இறக்குமதி'' என்பது, அதன் இலக்கண வேறுபாடுகளுடனும் அதன் பொருள் சேர்ந்த சொற்றொடர்களுடனும், இந்தியாவிற்கு வெளியேயுள்ள ஓர் இடத்திலிருந்து இந்தியாவிற்குள் கொண்டுவருதல் என்று பொருள்படும்;

(எ) ''உற்பத்தி'' என்பது, மின்னணு மென்சுருட்டுகளையும் அதன் பகுதி எதனையும் ஆக்குவதற்காகவோ அல்லது ஒன்று சேர்த்துப் பொருத்துவதற்காகவோ அமைந்த ஒரு செயல்முறை என்று பொருள்படும், அது மின்னணு மென்சுருட்டுகளையும் அவற்றின் பகுதி எதனையும் உற்பத்தி செய்வதற்குச் சார்வுறுவான அல்லது துணைவுறுவான, உள்செயல்முறை எதனையும் உள்ளடக்கும்;

(h) “notification” means a notification published in the Official Gazette;

(i) “person” includes--

(i) any individual or group of individuals;

(ii) a firm (whether registered or not);

(iii) a Hindu Undivided Family;

(iv) a trust;

(v) a limited liability partnership;

(vi) a co-operative society;

(vii) any corporation or company or body of individuals; and

(viii) every artificial juridical person not falling within any of the preceding sub-clauses;

(j) “place” includes any house, room, enclosure, space, conveyance or the area in like nature;

(k) “production” with its grammatical variations and cognate expressions, includes the making or assembling of electronic cigarettes and any part thereof;

(l) “sale” with its grammatical variations and cognate expressions, means any transfer of property in goods (including online transfer) by one person to another, whether for cash or on credit, or by way of exchange, and whether wholesale or retail, and includes an agreement for sale, and offer for sale and exposure for sale.

(ஏ) ''அறிவிக்கை'' என்பது, அதிகாரமுறை அரசிதழில் வெளியிடப்படும் ஓர் அறிவிக்கை என்று பொருள்படும்;

(ஐ) ''நபர்'' என்பது—

(i) தனிநபர் அல்லது தனிநபர்களின் தொகுதியினர் எவரையும்;

(ii) ஒரு நிறுவகத்தை (பதிவு செய்யப்பட்டிருப்பினும் இல்லாவிடினும்);

(iii) ஓர் இந்துக் கூட்டுக்குடும்பத்தை;

(iv) ஒரு பொறுப்புக்கட்டளையை;

(v) வரையறுக்கப்பட்ட ஒரு கடப்பாட்டுக் கூட்டாண்மையை;

(vi) ஒரு கூட்டுறவுச் சங்கத்தை;

(vii) கூட்டுருமம் அல்லது நிறுமம் அல்லது தனிநபர்களின் குழுமம் எதனையும்; மற்றும்

(viii) முந்திய உட்கூறுகளில் எதற்குள்ளும் வராத ஒவ்வொரு புனைவுச் சட்டமுறை நபரையும்

உள்ளடக்கும்.

(ஒ) ''இடம்'' என்பது வீடு, அறை, நிலப்பகுதி, வெளியிடம், ஏற்றிச் செல்லும் வாகனம் அல்லது அதே தன்மையிலான பரப்பிடம் எதனையும் உள்ளடக்கும்;

(ஓ) ''தயாரித்தல்'' என்பது, அதன் இலக்கண வேறுபாடுகளுடனும் அதன் பொருள் சேர்ந்த சொற்றொடர்களுடனும், மின்னணு மென் சுருட்டுகளையும் அவற்றின் பகுதி எதனையும் ஆக்குவதை அல்லது ஒன்று சேர்த்துப் பொருத்துவதை உள்ளடக்கும்;

(ஔ) ''விற்பனை'' என்பது, அதன் இலக்கண வேறுபாடுகளுடனும் அதன் பொருள் சேர்ந்த சொற்றொடர்களுடனும் சரக்குகளாலான சொத்தினை ஒரு நபரிடமிருந்து மற்றொருவருக்கு, பணத்துக்காகவோ அல்லது கடனாகவோ அல்லது பரிமாற்றம் மூலமாகவோ மற்றும் மொத்த விற்பனையாகவோ அல்லது சில்லரை விற்பனையாகவோ அமைந்த (இணையவழி மாற்றம் உள்ளடங்கலான) உரிமைமாற்றம் என்று பொருள்படும்; மற்றும் விற்பனைக்கான உடன்பாடு மற்றும் விற்பனை செய்ய முனைதல் மற்றும் விற்பனைக்கு காட்சிப்படுத்துதலை உள்ளடக்கும்.

Prohibition on production, manufacturing, import, export, transport, sale, distribution, advertisement of electronic cigarettes.

4. On and from the date of commencement of this Act, no person shall, directly or indirectly,—

(i) produce or manufacture or import or export or transport or sell or distribute electronic cigarettes, whether as a complete product or any part thereof; and

(ii) advertise electronic cigarettes or take part in any advertisement that directly or indirectly promotes the use of electronic cigarettes.

Prohibition on storage of electronic cigarettes.

5. On and from the date of commencement of this Act, no person, being the owner or occupier or having the control or use of any place shall, knowingly permit it to be used for storage of any stock of electronic cigarettes:

Provided that any existing stock of electronic cigarettes as on the date of the commencement of this Act kept for sale, distribution, transport, export or advertisement shall be disposed of in the manner hereinafter specified—

(a) the owner or occupier of the place with respect to the existing stock of electronic cigarettes shall, *suo motu,* prepare a list of such stock of electronic cigarettes in his possession and without unnecessary delay submit the stock as specified in the list to the nearest office of the authorised officer; and

(b) the authorised officer to whom any stock of electronic cigarettes is forwarded under clause (a) shall, with all convenient despatch, take such measures as may be necessary for the disposal according to the law for the time being in force.

**4.** இந்தச் சட்டத்தின் தொடக்கத்தேதியன்றும் அது முதற்கொண்டும், எந்த நபரும், நேர்முகமாகவோ மறைமுகமாகவோ,–

மின்னணு மென்சுருட்டுகளைத் தயாரித்தல், உற்பத்தி, இறக்குமதி, ஏற்றுமதி, இடம்விட்டு எடுத்துச் செல்லுதல், விற்பனை, பகிர்ந்தளித்தல், சேமித்தல் மற்றும் விளம்பரம் செய்தல் மீதான தடையுறுத்தம்.

(i) மின்னணு மென்சுருட்டுகளை, ஒரு நிறைவுற்ற பொருளாகவோ அல்லது அதன் ஒரு பகுதியாகவோ தயாரித்தலோ அல்லது உற்பத்தி அல்லது, இறக்குமதி அல்லது ஏற்றுமதி அல்லது இடம்விட்டு எடுத்துச் செல்லுதலோ அல்லது விற்பனை அல்லது பகிர்ந்தளித்தலோ; மற்றும்

(ii) மின்னணு மென்சுருட்டுகளை விளம்பரம் செய்தலோ அல்லது மின்னணு மென்சுருட்டுகளின் பயன்பாட்டை நேர்முகமாகவோ மறைமுகமாகவோ ஊக்குவிக்கும் விளம்பரம் எதிலும் பங்குகொள்ளுதலோ

ஆகாது.

**5.** இந்தச் சட்டத்தின் தொடக்கத்தேதியன்றும் அது முதற்கொண்டும், எந்த ஓர் இடத்திற்கும் உரிமையாளராகவோ அல்லது கையுடைமையாளராகவோ இருக்கிற அல்லது அதன் கட்டாள்கையை அல்லது பயன்பாட்டைக் கொண்டிருக்கிற நபர் எவரும், அறிந்தே அதனை, மின்னணு மென்சுருட்டுகளின் சரக்குஇருப்பு எதனையும் சேமித்து வைப்பதற்காக அனுமதித்தல் ஆகாது:

மின்னணு மென்சுருட்டுகளை சேமித்தல் மீதான தடையுறுத்தம்.

**வரம்புரையாக:** இந்தச் சட்டத்தின் தொடக்கத் தேதியன்றுள்ளவாறான விற்பனை, பகிர்ந்தளித்தல், இடம்விட்டு எடுத்துச் செல்லுதல், ஏற்றுமதி அல்லது விளம்பரப்படுத்துதலுக்காக வைத்திருக்கப்படும் மின்னணு மென்சுருட்டுகளின் இருந்துவரும் சரக்குஇருப்பு எதுவும் இதனில் இதன்பின்பு குறித்துரைக்கப்பட்ட முறையில் தீர்வு செய்யப்படுதல் வேண்டும்–

(அ) மின்னணு மென்சுருட்டுகளின் இருந்துவரும் சரக்கு இருப்பு பொறுத்த இடத்திற்கு உரிமையாளரோ அல்லது கையுடைமையாளரோ, தானே முன்வந்து, தன் உடைமையிலிருக்கும் மின்னணு மென்சுருட்டுகளின் அத்தகைய சரக்கு இருப்பு பட்டியல் ஒன்றைத் தயாரித்து, தேவையற்ற காலதாமதமின்றி அந்தப் பட்டியலில் குறித்துரைக்கப்பட்டவாறான சரக்குஇருப்பினை அருகிலுள்ள அதிகாரமளிக்கப்பெற்ற அலுவலரின் அலுவலகத்தில் ஒப்படைத்தல் வேண்டும்; மற்றும்

(ஆ). (அ) கூறின்படி அதிகாரமளிக்கப்பெற்ற அலுவலர் எவருக்கு மின்னணு மென்சுருட்டுகளின் சரக்கு இருப்பு எதுவும் அனுப்பப்படுகிறதோ அந்த அதிகாரமளிக்கப்பெற்ற அலுவலர், அனைத்து வகையிலும் இயன்றவரையிலான விரைவுடன், அப்போதைக்குச் செல்லாற்றலிலுள்ள சட்டத்தின்படி தீர்வு செய்வதற்குத் தேவையான அத்தகைய நடவடிக்கைகளை எடுத்தல் வேண்டும்.

Power to enter, search and seize without warrant.

6. (1) An authorised officer, if he has reason to believe that any provision of this Act has been, or is being contravened, may enter and search any place where—

(a) any trade or commerce in electronic cigarettes is carried on or electronic cigarettes are produced, supplied, distributed, stored or transported; or

(b) any advertisement of the electronic cigarettes has been or is being made.

(2). (1) After completion of the search referred to in sub-section (1), the authorised officer shall seize any record or property found as a result of the search in the said place, which are intended to be used, or reasonably suspected to have been used, in connection with any matter referred to in sub-section (1) and if he thinks proper, take into custody and produce, along with the record or property so seized, before the Court of Judicial Magistrate of the first class, any such person whom he has reason to believe to have committed any offence punishable under this Act.

(3) Where it is not practicable to seize the record or property, the officer authorised under sub-section (1), may make an order in writing to attach such property, stocks or records maintained by the producer, manufacturer, importer, exporter, transporter, seller, distributor, advertiser or stockist about which a complaint has been made or credible information has been received or a reasonable suspicion exists of their having been connected with any offence in contravention of the provisions of this Act and such order shall be binding on the person connected with the said offence.

(4) All searches, seizures and attachment under this section shall be made in accordance with the provisions of the Code of Criminal Procedure, 1973. 2/1974.

ஆணையின்றி நுழைவதற்கும், சோதனையிடுவதற்கும் மற்றும் கைப்பற்றுகை செய்வதற்குமான அதிகாரம்.

6. (1) அதிகாரமளிக்கப்பெற்ற அலுவலர் ஒருவர், இந்தச் சட்டத்தின் வகையம் எதுவும் மீறப்பட்டிருக்கிறது அல்லது மீறப்பட்டு வருகிறது என்று நம்புவதற்குக் காரணம் கொண்டிருப்பாராயின்,—

(அ) மின்னணு மென்சுருட்டுகளில் வணிகம் அல்லது வாணிபம் எதுவும் நடத்தப்பட்டு வருகிற அல்லது மின்னணு மென்சுருட்டுகள் தயாரிக்கப்படுகிற, வழங்கப்படுகிற, பகிர்ந்தளிக்கப்படுகிற, சேமித்து வைக்கப்படுகிற அல்லது இடம்விட்டு எடுத்துச் செல்லப்படுகிற; அல்லது

(ஆ) மின்னணு மென்சுருட்டுகளுக்கு விளம்பரம் எதுவும் செய்யப்பட்டிருக்கிற அல்லது செய்யப்பட்டு வருகிற,

இடம் எதிலும் நுழைந்து சோதனையிடலாம்.

(2). (1) ஆம் உட்பிரிவில் சுட்டப்பட்ட சோதனை முடிவடைந்த பின்பு, அதிகாரமளிக்கப்பெற்ற அலுவலர், மேற்சொன்ன இடத்தில் நடத்தப்பட்ட சோதனையின் விளைவாக (1) ஆம் உட்பிரிவில் சுட்டப்பட்ட பொருட்பாடு எதுவும் தொடர்பாக, பயன்படுத்தப்படக் கருதப்பட்டவையென அல்லது பயன்படுத்தப்பட்டிருப்பவையென தகுவாக ஐயுறுகிற பதிவணம் அல்லது சொத்து எதனையும் கைப்பற்றுதல் வேண்டும்; மற்றும் அவ்வாறு கைப்பற்றப்பட்ட பதிவணம் அல்லது சொத்துடன் சேர்த்து, அவர் உரியதெனக் கருதுவாராயின், இந்தச் சட்டத்தின்படி தண்டிக்கத்தக்க குற்றச்செயல் எதனையும் இழைத்திருப்பதாக அவர் நம்புவதற்குக் காரணம் கொண்டிருக்கிற அத்தகைய நபர் எவரையும் காவலில் எடுத்து, நீதித்துறை முதல் வகுப்புக் குற்றவியல் நடுவர் முன்பு முன்னிலைப்படுத்துதல் வேண்டும்.

(3) அத்தகைய பதிவணத்தையோ அல்லது சொத்தினையோ கைப்பற்றுவது நடைமுறைக்கு உகந்ததாக இல்லாதவிடத்து, (1) ஆம் உட்பிரிவின்படி அதிகாரமளிக்கப்பெற்ற அலுவலர் தயாரிப்பாளர், உற்பத்தியாளர், இறக்குமதி செய்பவர், ஏற்றுமதி செய்பவர், இடம்விட்டு எடுத்துச் செல்பவர், விற்பனை செய்பவர், பகிர்ந்தளிப்பவர், விளம்பரம் செய்பவர் அல்லது சரக்கு சேமிப்பாளர் இவர்களால் பேணிவரப்படும் சரக்குஇருப்புகள் அல்லது பதிவணங்களைப் பற்றி அவை இந்தச் சட்டத்தின் வகையங்களை மீறியதான, குற்றச்செயல் எதன் தொடர்பாகவும் முறையீடு ஒன்று செய்யப்பட்டிருக்கிறதோ அல்லது நம்பகமானத் தகவல் பெறப்பட்டிருக்கிறதோ அல்லது தகுமான ஐயப்பாடு ஒன்று இருந்து வருகிறதோ அத்தகைய சொத்தினை, பற்றுகை செய்வதற்கு எழுத்து வடிவில் ஆணையொன்றைப் பிறப்பிக்கலாம்; மற்றும் அத்தகைய ஆணை மேற்கூறிய குற்றச்செயலில் தொடர்புடைய நபரைக் கட்டுப்படுத்துதல் வேண்டும்.

(4) இந்தப் பிரிவின்படியான சோதனைகள், கைப்பற்றுகைகள் மற்றும் பற்றுகைகள் அனைத்தும் குற்றவியல் நடைமுறைச் சட்டத்தொகுப்பு 1973 இன் வகையங்களுக்கு இணங்க செய்யப்படுதல் வேண்டும். 2/1974.

Punishment for contravention of section 4.

7. Whoever contravenes the provisions of section 4, shall be punishable with imprisonment for a term which may extend to one year or with fine which may extend to one lakh rupees, or with both, and, for the second or subsequent offence, with imprisonment for a term which may extend to three years and with fine which may extend to five lakh rupees.

Punishment for contravention of section 5.

8. Whoever contravenes the provisions of section 5, shall be punishable with imprisonment for a term which may extend to six months or with fine which may extend to fifty thousand rupees or with both.

Jurisdiction and trial of offences.

9. (1) Any person committing an offence under section 4 or section 5 shall be triable for such offence in any place in which he is liable to be tried under any law for the time being in force.

(2) All offences under this Act shall be tried by the Court of Judicial Magistrate of the first class in accordance with the procedure provided for trials in the Code of Criminal Procedure, 1973. 2 of 1974.

Power to dispose of stock seized.

10. After completion of the proceedings before the Court and if it is proved that the stock seized by the authorised officer under the provisions of this Act are stocks of electronic cigarettes, such stocks shall be disposed of in accordance with the provisions contained in Chapter XXXIV of the Code of Criminal Procedure, 1973. 2 of 1974.

Offences by companies.

11. (1) Where an offence under this Act has been committed by a company, every person who, at the time the offence was committed, was in charge of, and was responsible to the company for the conduct of, the business of the company, as well as the company, shall be deemed to be guilty of the offence and shall be liable to be proceeded against and punished accordingly:

4 ஆம் பிரிவை மீறுவதற்கானத் தண்டனை.

7. 4 ஆம் பிரிவின் வகையங்களை மீறுபவர் எவரொருவரும், ஓர் ஆண்டு வரை நீடிக்கலாகும் காலவரை ஒன்றுக்குச் சிறைத்தண்டனை விதித்து அல்லது ஒரு இலட்சம் ரூபாய் வரை நீடிக்கலாகும் அபராதம் விதித்து அல்லது அவை இரண்டும் விதித்தும் மற்றும் இரண்டாம் மற்றும் அதற்குப் பிந்திய குற்றச்செயலுக்காக, மூன்று ஆண்டுகள் வரை நீடிக்கலாகும் காலவரை ஒன்றுக்குச் சிறைத்தண்டனை விதித்தும் ஐந்து இலட்சம் ரூபாய் வரை நீடிக்கும் அபராதம் விதித்தும் தண்டிக்கப்படத்தக்கவராதல் வேண்டும்.

5 ஆம் பிரிவை மீறுவதற்கானத் தண்டனை.

8. 5 ஆம் பிரிவின் வகையங்களை மீறுபவர் எவரொருவரும், ஆறுமாதங்கள் வரை நீடிக்கலாகும் காலவரை ஒன்றுக்குச் சிறைத் தண்டனை விதித்து அல்லது ஐம்பதாயிரம் ரூபாய் வரை நீடிக்கலாகும் அபராதம் விதித்து அல்லது அவை இரண்டும் விதித்துத் தண்டிக்கப்படத்தக்கவராதல் வேண்டும்.

குற்றச்செயல்களின் அதிகாரவரம்பும் விசாரணையும்.

9. (1). 4 ஆம் பிரிவின்படியோ அல்லது 5 ஆம் பிரிவின்படியோ குற்றச்செயல் ஒன்றை இழைக்கிற நபர் எவரும் அத்தகைய குற்றச்செயலுக்காக அப்போதைக்குச் செல்லாற்றலிலுள்ள சட்டம் எதன்படியும் எந்த இடத்தில் விசாரணை செய்யப்படுவதற்கு உள்ளாகக் கூடியவரோ அந்த இடம் எதிலும் விசாரணை செய்யப்படுதல் வேண்டும்.

(2) இந்தச் சட்டத்தின்படி அனைத்துக் குற்றச்செயல்களும் குற்றவியல் நடைமுறைச் சட்டத்தொகுப்பு, 1973 இல் விசாரணைகள் செய்வதற்காக வகைசெய்யப்பட்டுள்ள நடைமுறைகளின்படி நீதித்துறை முதல் வகுப்பு குற்றவியல் நடுவரால் விசாரணை செய்யப்படுதல் வேண்டும். 2/1974.

கைப்பற்றப்பட்ட சரக்கு இருப்புகளைத் தீர்வு செய்தலுக்கான அதிகாரம்.

10. நீதிமன்றத்தின் முன்புள்ள நடவடிக்கைகள் முடிவடைந்த பின்பு மற்றும் இந்தச் சட்டத்தின் வகையங்களின்படி அதிகாரமளிக்கப்பெற்ற அலுவலரால் கைப்பற்றப்பட்ட சரக்கு இருப்பு, மின்னணு மென்சுருட்டுகளின் சரக்கு இருப்புகள் என்று மெய்ப்பிக்கப்படுமாயின், அத்தகைய சரக்கு இருப்புகள் குற்றவியல் நடைமுறைச் சட்டத்தொகுப்பின் அத்தியாயம் XXXIV இல் அடங்கிய வகையங்களின்படி தீர்வு செய்யப்படுதல் வேண்டும். 2/1974.

நிறுமங்களால் செய்யப்படும் குற்றச்செயல்கள்.

11. (1) இந்தச் சட்டத்தின்படி ஒரு குற்றச்செயல் ஒரு நிறுமத்தால் இழைக்கப்பட்டிருக்கிறவிடத்து, அந்தக் குற்றச்செயல் இழைக்கப்பட்ட சமயத்தில், அந்த நிறுமத்தின் அலுவலை நடத்தி வருவதற்கு அந்த நிறுமத்தின் பொறுப்பைக் கொண்டிருந்தவரும் அதற்குப் பொறுப்பாயிருந்தவருமான நபர் ஒவ்வொருவரும், அத்துடன் அந்த நிறுமமும் அந்தக் குற்றச்செயலை இழைத்ததாகக் கொள்ளப்படுதல் வேண்டும்; மற்றும் அதன்படியே நடவடிக்கை எடுக்கப்பட்டுத் தண்டிக்கப்படுவதற்கு உள்ளாதலும் வேண்டும்:

Provided that nothing contained in this sub-section shall render any such person liable to any punishment provided in this Act, if he proves that the offence was committed without his knowledge or that he had exercised all due diligence to prevent the commission of such offence.

(2). (1) Notwithstanding anything contained in sub-section (1), where an offence under this Act has been committed by a company, and it is proved that the offence has been committed with the consent or connivance of, or is attributable to any neglect on the part of any director, manager, secretary or other officer of the company, such director, manager, secretary or other officer shall also be deemed to be guilty of the offence and shall be liable to be proceeded against and punished accordingly.

Explanation.—For the purpose of this section—

(a) "company" means any body corporate and includes a firm or other association of individuals; and

(b) "director" means a whole-time director in the company and in relation to a firm, means a partner in the firm.

Cognizance of offences.

12. No court shall take cognizance of an offence punishable under this Act, except upon a complaint in writing made by an authorised officer under this Act.

Offences to be cognizable.

13. Notwithstanding anything contained in the Code of Criminal Procedure, 1973 (2 of 1974), an offence under section 4 shall be cognizable. 2/1974.

Act to have overriding effect.

14. Save as otherwise expressly provided in this Act, the provisions of this Act shall have effect notwithstanding anything inconsistent therewith contained in any other law for the time being in force.

**வரம்புரையாக:** இந்த உட்பிரிவில் அடங்கிய எதுவும், அந்தக் குற்றச்செயல் தனக்குத் தெரியாமல் இழைக்கப்பட்டது என்று அல்லது அந்தக் குற்றச்செயல் இழைக்கப்படாமல் தடுப்பதற்கு அவர் உரிய முழுகவனம் செலுத்தியிருக்கிறார் என்று எவரும் மெய்ப்பிப்பாராயின், அவரை இந்தச் சட்டத்தில் வகைசெய்யப்பட்டுள்ள தண்டனை எதற்கும் உள்ளாக்காது.

**(2). (1)** ஆம் உட்பிரிவில் அடங்கிய எது எவ்வாறிருப்பினும், இந்தச் சட்டத்தின்படி ஒரு குற்றச்செயல் ஒரு நிறுமத்தால் இழைக்கப்பட்டிருக்கிறவிடத்து இயக்குநரின், மேலாளரின், செயலாளரின் அல்லது நிறுமத்தின் பிற அலுவலர் எவரொருவரின் இசைவுடனோ, மறைமுக ஆதரவுடனோ அந்தக் குற்றச்செயல் இழைக்கப்பட்டிருக்கிறது அல்லது அவர்பாலுள்ள கவனக்குறைவு எதற்கும் சாட்டத்தக்கதாக இருக்கிறது என்று மெய்ப்பிக்கப்படுகிறவிடத்து, அந்த இயக்குநர், மேலாளர், செயலாளர் அல்லது பிற அலுவலரும் கூட அந்தக் குற்றச்செயலை இழைத்திருப்பதாகக் கொள்ளப்படுதல் வேண்டும்; அதன்படியே நடவடிக்கை எடுக்கப்பட்டுத் தண்டிக்கப்படுவதற்கு உள்ளாதல் வேண்டும்.

**விளக்கம்.–** இந்தப்பிரிவின் நோக்கத்திற்காக–

**(அ)** ''நிறுமம்'' என்பது, ஒரு கூட்டுருமக் குழுமம் என்று பொருள்படும்; மற்றும் ஒரு நிறுவகத்தை அல்லது பிற தனிநபர்களின் குழுவை உள்ளடக்கும்; மற்றும்

**(ஆ)** ''இயக்குநர்'' என்பது, நிறுமத்திலுள்ள ஒரு முழு நேர இயக்குநர் என்று பொருள்படும்; மற்றும் ஒரு நிறுவகத்தைப் பொறுத்தவரை, நிறுவகத்தில் உள்ள கூட்டாளி ஒருவர் என்று பொருள்படும்.

குற்றச்செயல்களை விசாரணைக்கு எடுத்துக் கொள்ளுதல்.

**12.** நீதிமன்றம் எதுவும், இந்தச் சட்டத்தின்படி தண்டிக்கத்தக்க குற்றச்செயல் ஒன்றை, இந்தச் சட்டத்தின்படி அதிகாரமளிக்கப்பெற்ற ஒரு அலுவலரால் எழுத்துவடிவில் செய்யப்படும் முறையீடு ஒன்றின் பேரில் அல்லாமல் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளுதல் ஆகாது.

குற்றச்செயல்கள் பிடியாணையின்றிக் கைது செய்யத் தக்கவையாக இருத்தல்.

2/1974. **13.** குற்றவியல் நடைமுறைச் சட்டத்தொகுப்பு, **1973** இல் அடங்கிய எது எவ்வாறிருப்பினும், **4** ஆம் பிரிவின்படியான குற்றச்செயல் ஒன்று பிடியாணையின்றிக் கைது செய்யத்தக்கதாகும்.

சட்டம் மீதூர்ந்து இயங்கும் செல்திறமுடையது.

**14.** இந்தச் சட்டத்தில் பிறவாறாக வெளிப்படையாக வகைசெய்யப்பட்டாலன்றி, இந்தச் சட்டத்தின் வகையங்கள், அப்போதைக்குச் செல்லாற்றலிலுள்ள பிற சட்டம் எதிலும், அதனுடன் முரணாக அடங்கிய எது எவ்வாறிருப்பினும் செல்திறம் பெறுதல் வேண்டும்.

Application of other laws not barred.

15. The provisions of this Act shall be in addition to and not in derogation of the provisions of any other law for the time being in force prohibiting production, manufacture, import, export, transport, sale, distribution, storage and advertisement of electronic cigarettes.

Protection of action taken in good faith.

16. No suit, prosecution or other legal proceeding shall lie against the Central Government or any State Government or any officer of the Central Government or any State Government for anything which is in good faith done or intended to be done under this Act.

Power to remove difficulties.

17. (1) If any difficulty arises in giving effect to the provisions of this Act, the Central Government may, by an order published in the Official Gazette, make such provision not inconsistent with the provisions of this Act, as may appear to be necessary or expedient for removing the difficulty:

Provided that no order shall be made under this section after the expiry of two years from the date of the commencement of this Act.

(2) Every order made under this section shall be laid, as soon as may be after it is made, before each House of Parliament.

Repeal and savings.

18. (1) The Prohibition of Electronic Cigarettes (Production, Manufacture, Import, Export, Transport, Sale, Distribution, Storage and Advertisement) Ordinance, 2019 is hereby repealed. Ord. 14 / 2019.

(2) Notwithstanding such repeal, anything done or any action taken under the said Ordinance shall be deemed to have been done or taken under the corresponding provisions of this Act.

**15.** இந்தச் சட்டத்தின் வகையங்கள், மின்னணு மென்சுருட்டுகளைத் தயாரித்தல், உற்பத்தி, இறக்குமதி, ஏற்றுமதி, இடம்விட்டு எடுத்துச் செல்லுதல், விற்பனை, பகிர்ந்தளித்தல், சேமித்தல் மற்றும் விளம்பரம் செய்தல் இவற்றைத் தடையுறுத்தும் அப்போதைக்குச் செல்லாற்றலிலுள்ள பிற சட்டம் எதனின் வகையங்களுக்குக் கூடுதலாக இருக்க வேண்டுமேயன்றி அவற்றைத் திறக்குறைவுறச் செய்வதாக அல்ல. பிற சட்டங்கள் பொருந்துவது தடை செய்யப்படவில்லை.

**16.** இந்தச் சட்டத்தின்படி நல்லெண்ணத்தில் செய்யப்பட்ட அல்லது செய்யப்படக் கருதப்பட்ட எதற்காகவும், மைய அரசு அல்லது மாநில அரசு எதற்கும் அல்லது மைய அரசு அல்லது மாநில அரசு எதனின் அலுவலர் எவருக்கும் எதிராக உரிமை வழக்கு, குற்றவழக்கு அல்லது பிற சட்ட நடவடிக்கை எதுவும் தொடர்வதற்கு உற்றது ஆகாது. நல்லெண்ணத்தில் எடுக்கப்பட்ட நடவடிக்கைக்குப் பாதுகாப்பு.

**17. (1)** இந்தச் சட்டத்தின் வகையங்களுக்குச் செல்திறம் கொடுப்பதில் இடர்ப்பாடு எதுவும் எழுமாயின், மையஅரசு, அதிகாரமுறை அரசிதழில் வெளியிடப்படும் ஓர் ஆணையின் வழி, அந்த இடர்ப்பாட்டினை அகற்றுவதற்குத் தேவையென அல்லது உகந்ததென தோன்றுகிற, இந்தச் சட்டத்தின் வகையங்களுடன் முரண்படாத, அத்தகைய வகையத்தைச் செய்யலாம்: இடர்ப்பாடுகளை அகற்றுவதற்கான அதிகாரம்.

**வரம்புரையாக:** அத்தகைய ஆணை எதுவும், இந்தப் பிரிவின்படி இந்தச் சட்டத்தின் தொடக்கத்தேதியிலிருந்து இரண்டு ஆண்டுகள் கழிவுற்ற பின்பு பிறப்பிக்கப்படுதல் ஆகாது.

**(2)** இந்தப் பிரிவின்படி பிறப்பிக்கப்படும் ஆணை ஒவ்வொன்றும் அது பிறப்பிக்கப்பட்ட பின்பு, கூடிய விரைவில், நாடாளுமன்ற அவை ஒவ்வொன்றின் முன்பும் வைக்கப்படுதல் வேண்டும்.

அவசரச் சட்டம் 14/2019. **18. (1)** மின்னணு மென்சுருட்டுகளைத் (தயாரித்தல், உற்பத்தி செய்தல், இறக்குமதி, ஏற்றுமதி, இடம்விட்டு எடுத்துச் செல்லுதல், விற்பனை, பகிர்ந்தளித்தல், சேமித்தல் மற்றும் விளம்பரம் செய்தல்) தடையுறுத்துதல் அவசரச்சட்டம், **2019** ஈங்கிதனால் நீக்கறவு செய்யப்படுகிறது. நீக்கறவும் காப்புரைகளும்.

**(2)** அத்தகைய நீக்கறவு இருந்தபோதிலும், மேற்சொன்ன அவசரச் சட்டத்தின்படி செய்யப்பட்ட எதுவும், அல்லது எடுக்கப்பட்ட நடவடிக்கை எதுவும், இந்தச் சட்டத்தின் நேரிணையான வகையங்களின்படி செய்யப்பட்டிருப்பதாகவோ அல்லது எடுக்கப்பட்டிருப்பதாகவோ கொள்ளப்படுதல் வேண்டும்.